**ஜனவரி – 09**

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ் ஆவணங்கள் மற்றும் முத்திரைகள் – மைசூரிலிருந்து சென்னைக்கு இடமாற்றம்

- சென்னையின் உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வானது மைசூர் கல்வெட்டுக் கிளையில் பாதுகாக்கப்படும் அனைத்துத் தமிழ் ஆவணங்கள் மற்றும் முத்திரைகள் ஆகியவற்றை 6 மாதங்களுக்குள் சென்னையிலுள்ள அதன் கிளை அலுவலகத்திற்கு இடமாற்ற வேண்டும் என்று கலாச்சாரத் துறை அமைச்சகத்திற்கு உத்தரவிட்டுள்ளது.
- N. கிருபாகரன், மற்றும் M. துரைசாமி ஆகியோர் அடங்கிய ஒரு அமர்வு சென்னையில் உள்ள இந்தியத் தொல்லியல் துறையின் துணைப் பிரிவு சபையின் கல்வெட்டுக் கிளை அலுவலகத்தினை 'கல்வெட்டுக் கிளை அலுவலகம் – தமிழ்' என்று பெயரிடுமாறும் மத்திய அரசு மட்டும் இந்தியத் தொல்லியல் துறை ஆகியவற்றிற்கு உத்தரவிட்டுள்ளது.

## முதல்வர் தலைமையிலான ஆலோசகக் குழு

- இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள புகழ்பெற்ற கோயில்களின் மேலாண்மை மற்றும் பக்தர்களுக்கான வசதிகள் போன்றவற்றை மேம்படுத்தச் செய்வதற்காக வேண்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான மாநில அளவிலான ஓர் ஆலோசகக் குழுவினை தமிழக அரசு அமைத்துள்ளது.
- இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் P.K. சேகர் பாபு இக்குழுவின் துணைத் தலைவராகச் செயல்படுவார்.

# தேசியச் செய்திகள்

## உத்திசார்பு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் – ஜம்மு & காஷ்மீர்

- குல்மார்க் பகுதியிலுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட கனல் நிலங்களையும் சோனாமர்க் பகுதியில் உள்ள 354 கனல் (kanals) நிலங்களையும் உத்திசார்பு ரீதியில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக அறிவிப்பதற்கு ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசு நிர்வாகம் தனது ஒப்புதலை வழங்கியது.
- இந்த நிலமானது ஆயுதப் படைகளின் பாதுகாப்பு நடவடிக்கை சார்ந்த மற்றும் பயிற்சித் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

## பசுமை ஆற்றல் வழித்தடம் – இரண்டாம் கட்டப் பணிகள்

- இந்திய அரசானது பசுமை ஆற்றல் வழித்தடக் கட்டமைப்புப் பணியின் 2வது கட்டப் பணிகளைத் தொடங்க ஒப்புதல் அளித்துள்ளது.
- 2வது கட்டப் பணிகளில் 10,750 கி.மீ. தூரத்திற்கு இரயில் போக்குவரத்து வழித்தடங்கள் கட்டமைக்கப்பட்டு அதனுடன் 27,500 மெகா வோல்ட் ஆம்பியர் திறனுள்ள துணைமின் நிலையங்களும் சேர்க்கப்பட உள்ளன.
- இத்திட்டமானது 7 மாநிலங்களில் அமல்படுத்தப்பட உள்ளது.
- அவையாவன உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் குஜராத் ஆகியன ஆகும்.

- பசுமை ஆற்றல் வழித்தடக் கட்டமைப்புப் பணிகளின் இரண்டாம் கட்டப் பணிகள் 2021-22 முதல் 2025-26 வரையில் செயல்படுத்தப்படும்.
- இத்திட்டத்திற்கான செலவில் 33% பங்கினை மத்திய அரசு வழங்கும்.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் 450 GW திறனுடைய ஆற்றல் உலைகளை நிறுவ வேண்டும் எனும் இந்தியாவின் இலக்கினை அடைவதற்கு உதவும்.




## திறந்தநிலைப் பாறை அருங்காட்சியகம்




- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் & புவி அறிவியல் அமைச்சகத்தின் இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், ஹைதராபாத்தில் நிறுவப்பட்டுள்ள இந்தியாவின் முதலாவது திறந்தநிலைப் பாறை அருங்காட்சியகத்தினைத் திறந்து வைத்தார்.
- இந்த அருங்காட்சியகத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 35 வெவ்வேறு

வகைப் பாறைகள் காட்சிப் படுத்தப்படுகின்றன.

- ❖ இந்தப் பாறைகளின் வயதானது சுமார் 3.3 பில்லியன் வருடங்கள் முதல் 55 மில்லியன் வருடங்கள் வரை இருக்கும்.
- ❖ இந்தப் பாறைகள் புவிப் பரப்பிலிருந்து 174 கி.மீ. ஆழத்தில் உள்ள புவியின் ஆழமானப் பகுதிகளின் ஒரு பிரதி பிம்பமாக உள்ளன.
- ❖ இந்த அருங்காட்சியகமானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் கழகத்தின் புவி அமைப்பியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் திறக்கப் பட்டுள்ளது.

## நீட் முதுகலை மற்றும் நீட் இளங்கலைக் கல்விச் சேர்க்கை




- ❖ பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினருக்கு 10% மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% என்று ஜூலை 29, 2021 அன்று வெளியிடப்பட்ட அரசு அறிவிப்பின் அடிப்படையில் நீட் சேர்க்கைக்கான கலந்தாய்வுகளைத் தொடர்வதற்கு அனுமதி வழங்கிட வேண்டி உச்சநீதி மன்றம் தனது இடைக்கால உத்தரவில் தெரிவித்துள்ளது.
- ❖ D.Y. சந்திரசூட் மற்றும் A.S. போபண்ணா ஆகிய நீதிபதிகள் அடங்கிய ஒரு அமர்வானது, தற்போதையச் சேர்க்கைப் பதிவிற்காக வேண்டி பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டிற்கு விதிக்கப்பட்ட ரூ. 8 லட்சம் என்ற வரம்பினைப் பின்பற்றுமாறு அஜய் பூஷன் பாண்டே குழு அளித்த பரிந்துரையை ஏற்றுக் கொண்டது.

## இந்தியத் திறன் போட்டிகள்

- ❖ தேசியத் திறன் மேம்பாட்டுக் கழகமானது இந்தியத் திறன் போட்டியை நடத்துகிறது.

- இது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டு இந்தியத் திறன்கள் போட்டியில் வெற்றி பெறுபவர்கள் உலகத் திறன் போட்டிகளில் பங்கு பெறுவர்.
- உலகத் திறன் போட்டிகளானது 2022 ஆம் ஆண்டில் சீனாவின் சாங்காய் நகரில் நடத்தப் பட உள்ளது.
- இந்த வெற்றியாளர்கள் 60 வெவ்வேறு நாடுகளிலிருந்து வரும் 1500 போட்டியாளர்களை எதிர்கொண்டு போட்டியிடுவர்.
- உலகத் திறன் போட்டிகளானது "திறன் போட்டிகளின் ஒலிம்பிக்" எனவும் அழைக்கப் படுகிறது.





## சீ டிராகன் 2022

- இது அமெரிக்காவினால் நடத்தப்படும் ஒரு பயிற்சியாகும்.
- இந்திய நாடும் நாற்கரப் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை அமைப்பு (அ) குவாட் என்ற அமைப்பினைச் சேர்ந்த தனது சக பங்குதார நாடுகளும் சேர்ந்து கனடா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுடன் இணைந்து சீ டிராகன் 2022 எனப்படும் இந்தப் பன்னாட்டுப் பயிற்சியில் பங்கு கொள்கின்றன.
- இது மேற்கு பசிபிக் பகுதியில் உள்ள குவாம் என்னுமிடத்தில் நடைபெறுகிறது.
- இந்தப் பயிற்சியில் பங்கு கொள்ளும் 6 நாடுகள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகியனவாகும்.


## மின்னாளுகை மாநாடு

- ஒன்றிய அரசின் நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது குறைதீர்ப்புத் துறை மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் தெலுங்கானா மாநில அரசு ஆகியவை இணைந்து 24வது தேசிய மின்னாளுகை மாநாட்டினை நடத்த உள்ளது.
- இந்த மாநாடானது மாதாப்பூரிலுள்ள ஹைதராபாத் சர்வதேச சமூக நல மையத்தில் நடைபெற உள்ளது.
- இந்த மாநாடானது "India's Techade: Digital Governance in a Post Pandemic World" என்ற ஒரு கருத்துருவின் கீழ் நடத்தப்பட உள்ளது.

- இது மின்னாளுகை சார்ந்த முன்னெடுப்புகளுக்கு உத்வேகம் அளிக்கும்.
- மின் ஆளுகையில் தங்களது வெற்றிகரமான ஈடுபாடுகளை வெளிப்படுத்துவதற்கு தொழில்துறைகள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு இது வாய்ப்புகளை வழங்குகிறது.




## வீர் கதா திட்டம்




- இந்திய அரசானது ஆசாதி கா அம்ரித் மகோத்சவத்தின் ஒரு பகுதியாக வீர் கதா என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கியது.
- வீர் கதா என்ற இந்த திட்டமானது போர் வீரர்கள் மற்றும் துணிச்சல்மிக்க இருதயங்கள் கொண்டவர்களின் கதைகள் பற்றி இந்தியப் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்து அவர்களை ஊக்குவிப்பதற்காக வேண்டி அறிமுகப் படுத்தப் பட்டது.
- 25 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் வெற்றியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- இத்திட்டத்தின் கீழ், வீர விருது பெற்றவர்கள் பற்றிய செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் திட்டச் செயல்முறைகளை செய்வதற்கு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுவர்.
- வீர் கதா திட்டமானது கல்வித் துறை அமைச்சகம், பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவு

முறை மற்றும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் ஆகியவற்றினால் தொடங்கப் பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆசிய நீர்ப்பறவைக் கணக்கெடுப்பு

- ஆசிய நீர்ப்பறவைக் கணக்கெடுப்பு என்பது சர்வதேச நீர்ப்பறவைக் கணக்கெடுப்பின் ஒரு ஒருங்கிணைந்தப் பகுதியாகும்.
- இந்த சர்வதேசக் கணக்கெடுப்பானது 143 நாடுகளில் மேற்கொள்ளப்படுகிறது.
- இந்தக் கணக்கெடுப்பானது சர்வதேச ஈரநில அமைப்பு மற்றும் மும்பை இயற்கை வரலாற்றுச் சமூக அமைப்பு ஆகியவற்றால் இணைந்து நடத்தப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டின் ஜனவரி மாதத்திலும் இந்தக் கணக்கெடுப்பானது மேற்கொள்ளப் படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சிறந்த பத்திரிகைக்கான ராம்நாத் கோயங்கா விருதுகள்

**List of winners**

- Hindi (Print): Anand Choudhary, Dainik Bhaskar
- Hindi (Broadcast): Sushil Kumar Mohapatra, NDTV India
- Regional Languages (Print): Aniket Vasant Sathe, Loksatta
- Regional Languages (Broadcast): Sunil Baby, Media One TV
- Environment, Science and Technology Reporting (Print): Team Pari (People's Archive of Rural India)
- Environment, Science and Technology Reporting (Broadcast): Team Scroll
- Uncovering India Invisible (Print): Shiv Sahay Singh, The Hindu
- Uncovering India Invisible (Broadcast): Tridip K Mandal, The Quint
- Business And Economic Journalism (Print): Sumant Banerji, Business Today
- Business And Economic Journalism (Broadcast): Ayushi Jindal, India Today TV
- Reporting On Politics and Government (Digital): Dheeraj Mishra, The Wire
- Reporting On Politics and Government (Broadcast): Seemi Pasha, Thewire.in
- Sports journalism (Print): Nihal Koshie, The Indian Express
- Sports journalism (Broadcast): Team NewsX
- Investigative Reporting (Print): Kaunain Sheriff M, The Indian Express
- Investigative Reporting (Broadcast): S Mahesh Kumar, Manorama News
- Reporting On Arts, Culture and Entertainment: Uday Bhatia, Mint
- Prakash Kardaley Memorial Award for Civic Journalism: Chaitanya Marpakwar, Mumbai Mirror
- Photojournalism: Zishaan A Latif, The Caravan
- Books (Non-Fiction): Arun Mohan Sukumar

- இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கைக் குழுமமானது, 2019 ஆம் ஆண்டில் இந்திய நாட்டின் பத்திரிகையாளர்கள் ஆற்றிய சிறந்தப் பணிகளுக்காக அவர்களுக்கு வழங்கப் படும் ராம்நாத் கோயங்கா விருதுகளை அறிவித்துள்ளது.
- 2006 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் இந்த விருதானது பத்திரிகைத் துறையினருக்கு வழங்கப்படும் இந்தியாவின் மிகவும் மதிப்பு மிக்க விருதுகளுள் ஒன்றாகும்.
- 1932 ஆம் ஆண்டில் 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' மற்றும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமம்'

ஆகியவற்றினை நிறுவிய ராம்நாத் கோயங்காவின் நினைவாக இந்த விருதிற்கு இந்தப் பெயரிடப் பட்டது.

## T.S. திருமூர்த்தி




- ஐக்கிய நாடுகளுக்கான இந்தியாவின் ஒரு நிரந்தரப் பிரதிநிதியான T.S. திருமூர்த்தி 2002 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீவிரவாத எதிர்ப்புக் குழுவிற்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி 01 அன்று தொடங்கி ஓராண்டு வரையில் ஐக்கிய நாடுகள் சபையின் தீவிரவாத எதிர்ப்புக் குழுவின் தலைமைப் பொறுப்பினை இவர் வகிப்பார்.
- இந்தியா தற்போது 15 உறுப்பினர் நாடுகள் கொண்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஒரு தற்காலிக உறுப்பினராக உள்ளது.
- இந்த 2 ஆண்டு காலப் பதவியானது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்றோடு நிறைவடைகிறது.

## எண் கணித ஜோதிடத்தில் உலக சாதனை



- J.C. சௌத்ரி எண்கணித சோதிடத்தின் முதல் உலக கின்னஸ் சாதனையையும் 2022 ஆம் ஆண்டின் முதல் உலக சாதனையையும் படைத்துள்ளார்.
- இவர் அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம், மத்தியக் கிழக்கு மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 6000 பங்கேற்பாளர் மற்றும் எண் கணித ஜோதிட

ஆர்வலர்கள் ஆகியோருக்குப் பண்டைய அறிவியல் பற்றி பயிற்றுவிக்க செய்து இந்தச் சாதனையைப் படைத்தார்.

- கின்னஸ் உலக சாதனைக்கான லண்டன் அலுவலகமானது இந்தச் சாதனைக்காக "எண் கணித ஜோதிடம்" என்ற ஒரு புதிய பிரிவை உருவாக்கியுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★